பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**10 02 2026** **TUESDAY** **6.30 PM**

## மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

**1)** நாட்டில் இணையதள குற்றங்களை தடுப்பதற்கு மத்திய அரசு முனைப்பான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

**2)** தமிழ்நாடு, கேரளா உள்ளிட்ட மாநிலங்களில் இவ்வாண்டு சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறுவதையொட்டி, அதிகாரிகள் பணியிட மாற்றத்தை இம்மாதம் 27-ஆம் தேதிக்குள் முடிக்குமாறு தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

**3)** கோவையின் இருகூர் - போத்தனூர் ரயில் பாதை திட்டத்திற்கு அனுமதி வழங்கிய பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு, மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் நன்றி தெரிவித்துள்ளார்.

**4)** மத்திய சுகாதார அமைச்சகத்தின் அறிவுறுத்தலின்படி, தமிழகத்தில் பறவைக் காய்ச்சலை தடுக்க உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாநில அமைச்சர் திரு மா. சுப்பிரமணியன் கூறியுள்ளார்.

**5)** உலகக்கோப்பை டுவென்டி - டுவென்டி கிரிக்கெட் போட்டியில் ஐக்கிய அரபு எமிரேட்ஸுக்கு எதிரான ஆட்டத்தில் நியூசிலாந்து 10 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>

நாட்டில் இணையதள குற்றங்களை தடுப்பதற்கு மத்திய அரசு முனைப்பான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று இணையதள குற்றங்களை தடுப்பதற்கான கட்டமைப்பை உருவாக்குவது குறித்த தேசிய மாநாட்டில் உரையாற்றிய அவர், நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்ய இணையதள குற்றங்களை முற்றிலுமாக தடுக்க வேண்டியது அவசியம் என்று குறிப்பிட்டார்.

இணையதள குற்றங்களை தடுப்பதற்கான புலனாய்வு தகவல்களை உடனுக்குடன் பகிர்ந்துகொள்வதற்கு வசதியாக இணையதள குற்றங்கள் ஒருங்கிணைப்பு மையம் 14-சி செயல்பட்டு வருவதாகவும், புலனாய்வுப் பணியில் இந்த அமைப்பு முக்கிய பங்கு வகிப்பதாகவும் அவர் கூறினார்.

பொதுமக்களிடையே இணையதள குற்றங்கள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தி, முன்னெச்சரிக்கையுடன் செயல்படுவதற்கான ஆலோசனைகளை வழங்க வேண்டும் என்றும் திரு அமித் ஷா கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>>

தமிழ்நாடு, கேரளா, மேற்குவங்கம், அஸ்ஸாம் மாநிலங்கள் மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் சட்டப்பேரவைத் தேர்தல் இவ்வாண்டு நடைபெறுவதையொட்டி, சொந்த மாவட்டங்களில் பணியாற்றும் அதிகாரிகளை பணியிட மாற்றம் செய்யுமாறு தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பாக, தேர்தல் ஆணையம் இந்த மாநிலங்களின் தலைமைச் செயலர்கள் மற்றும் மாநில தலைமை தேர்தல் அதிகாரிகளுக்கு எழுதியுள்ள கடிதத்தில், கடந்த நான்கு ஆண்டுகளில் மூன்று ஆண்டுகளுக்கு மேல் ஒரே இடத்தில் பணியாற்றிய அதிகாரிகளை பணியிட மாற்றம் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளது.

இந்த பணியிட மாற்றங்கள் இம்மாதம் 27-ஆம் தேதிக்குள் முடிக்கப்பட்டு, தேர்தல் ஆணையத்துக்கு தெரிவிக்கப்பட வேண்டும் என்றும் அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

கோவையின் இருகூர் - போத்தனூர் ரயில் பாதையை இருவழி பாதையாக்கும் திட்டத்திற்கு விரைந்து அனுமதி வழங்கிய பிரதமர் திரு

நரேந்திர மோடிக்கு மனமார்ந்த நன்றியை தெரிவிப்பதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

அவர் இன்று வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவை தாம் சந்தித்தபோது, இதற்கான அனுமதியை வழங்கிய கடிதத்தை தம்மிடம் அளித்ததாக தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

பறவைக்காய்ச்சல் நோய் பரவுவதை தடுக்க மத்திய சுகாதார அமைச்சகத்தின் அறிவுறுத்தலின்படி, தமிழகத்தில் உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னை ஓமந்தூரார் பன்நோக்கு மருத்துவனையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனை தெரிவித்தார்.

***(Sound Byte — மா.சு - 50 Sec.)***

சென்னை ஓமந்தூரார் பன்நோக்கு மருத்துவமனையில் புதிதாக நிறுவப்பட்டுள்ள இரண்டாவது **Cath Lab** கருவியையும் அவர் திறந்துவைத்தார்.

அறுவை சிகிச்சையின்றி இதய நாள அடைப்புகளை அகற்றுவதற்கு இக்கருவி பயன்படுவதாகவும் திரு மா. சுப்பிரமணியன் கூறினார்.

<<<<<<>>>>>

தேசிய குடற்புழு நீக்க தினம் இன்று கடைபிடிக்கப்பட்டது.

தமிழகத்தில் இதனையொட்டி இரண்டு கோடியே 10 லட்சம் குழந்தைகளுக்கும், 30 வயதுக்கு உட்பட்ட 54 லட்சம் பெண்களுக்கும் குடற்புழு நீக்க மாத்திரைகள் வழங்கும் முகாம்களை மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா. சுப்பிரமணியன் இன்று தொடங்கிவைத்தார்.

தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் இந்த முகாம்கள் இன்று நடைபெற்றன.

மயிலாடுதுறையில் இந்த முகாம்களில் பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் குடற்புழு நீக்க மாத்திரைகள் வழங்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte — குருமூர்த்தி மணிகண்டன் — 45 Sec.)***

<<<<<<>>>>>

தமிழகத்தில் திமுக அரசு பொறுப்பேற்றதிலிருந்து நிதியை பெருக்குவதற்கான நடவடிக்கை எதுவும் எடுக்காமல், ஐந்து லட்சம்

கோடி ரூபாய் கடன் வாங்கப்பட்டுள்ளதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், கடந்த மூன்று மாதமாக பல திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யாமலேயே அடிக்கல் நாட்டுவது, ஒப்பந்தம் கோருவது போன்ற பணிகளை மாநில அரசு செய்து வருவதாக கூறியுள்ளார்.

மக்களின் வரிப்பணத்தில் திமுக அரசு விளம்பரம் தேடிக் கொள்வதாகவும் திரு எடப்பாடி பழனிசாமி குறை கூறியுள்ளார்.

<<<<<<>>>>>

இந்திய — அமெரிக்க வர்த்தக ஒப்பந்தத்தை வெற்றிகரமாக முடித்திருப்பது நாட்டின் பொருளாதாரத்திற்கு உத்வேகம் அளிக்கும் என்று வேளாண் மற்றும் அனைத்து தொழில் வர்த்தக சங்கத் தலைவர் திரு எஸ். ரத்னவேலு தெரிவித்துள்ளார்.

மதுரையில், எமது செய்தியாளருக்கு பேட்டியளித்த அவர், பிரதமர் திரு நரேந்திர மோடி மிகவும் திறமையாகவும், அமைதியாகவும் பேச்சுவார்த்தை நடத்தி இந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றி உள்ளார் என்றும் கூறினார்.

***(Sound Byte — ரத்னவேலு - 48 Sec.)***

<<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

மயிலாடுதுறை மாவட்டத்தில் நெல் கொள்முதல் நிலையங்களின் செயல்பாடுகள், நெல் கொள்முதல் பணிகள் குறித்து கூட்டுறவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை செயலர் திரு பழனிச்சாமி அதிகாரிகளுடன் ஆய்வு நடத்தினார்.

-----------------

குரூப் — D போட்டித் தேர்வுக்கான பயிற்சி வகுப்பு கிண்டியில் உள்ள மாநில தொழில்நெறி வழிகாட்டு மையத்தில் நாளை முதல் தொடங்க உள்ளதாக அம்மையத்தின் பயிற்சித்துறையின் இயக்குநர் டாக்டர் சி பழனி தெரிவித்துள்ளார்.

----------------

நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியில் இணைய பாதுகாப்பு தின நிகழ்ச்சி இன்று நடத்தப்பட்டது.

-----------------

தென்காசி மாவட்டம் அடவிநயினார் அணைக்கட்டு பகுதியில் அரியவகை கடமானை வேட்டையாடிய ஒருவரை வனத்துறையினர் கைது செய்தனர்.

---------------

திருப்பத்தூர் மாவட்டம் புத்துக்கோவில் கிராமத்தில் எருது விடும் திருவிழா இன்று நடைபெற்றது. இதில் **200**-க்கும் மேற்பட்ட காளைகள் பங்கேற்றன.

---------------

சென்னை மற்றும் கோயம்புத்தூரில் தனியார் பங்களிப்புடன் செல்லப் பிராணிகள் பூங்கா அமைத்து பராமரிக்க விரும்பும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் www.tnawb.tn.gov.in என்ற இணையதளத்தில் வரும் **26**-ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்குமாறு மாநில அரசு தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக்கோப்பை டுவென்டி - டுவென்டி கிரிக்கெட் போட்டியில் குரூப்-டி பிரிவில் ஐக்கிய அரபு எமிரேட்ஸுக்கு எதிரான ஆட்டத்தில் நியூசிலாந்து **10** விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

சென்னையில் நடைபெற்ற இப்போட்டியில் டாஸ் வென்று முதலில் பேட் செய்த ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நிர்ணயிக்கப்பட்ட **20** ஓவரில், **6** விக்கெட் இழப்பிற்கு **173** ரன் எடுத்தது.

**174** ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய நியூசிலாந்து **15** புள்ளி இரண்டு ஓவரிலேயே வெற்றி இலக்கை எட்டியது.

தில்லியில் இன்று குரூப் ஏ பிரிவில் நடைபெற்ற மற்றொரு போட்டியில், நெதர்லாந்து — நமீபியாவை 7 விக்கெட் வித்தியாசத்தில் வென்றது.

பாகிஸ்தான் — அமெரிக்கா இடையிலான ஆட்டம் கொழும்பில் இரவு 7 மணிக்கு நடைபெறுகிறது.

-----

சென்னை சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சசி குமார் முகுந்த் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவில் அவர், **7-5, 6-3,** என்ற செட் கணக்கில் நிதின் குமார் சின்ஹாவை வென்றார்.

**<<<<<<END>>>>>>**